தினத் தந்தி
DAILY THANTHI

திருச்சி 26-11-2023

இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில்

# யுவ சங்கம் 3-ம் கட்ட நிகழ்ச்சி தொடக்கம்

## ராஜஸ்தான் மாணவர்கள் வருகை

திருச்சி, நவ.26-

திருச்சி இந்திய மேலாண்மையியல் நிறுவனத்தில் யுவ சங்கம் 3-ம் கட்ட நிகழ்ச்சி தொடக்க விழா நடைபெற்றது. இந்த யுவ சங்கம் நிகழ்ச்சியானது மாநிலங்களுக்கு இடையேயான பிணைப்பை வலுப்படுத்தவும், இந்தியாவின் இளைஞர்களிடையே ஒற்றுமை மற்றும் ஒற்றுமை உணர்வை வளர்க்கவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராகஇந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் வருமான வரித்துறை கூடுதல் ஆணையர் நித்யா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் ராஜஸ்தானில் இருந்து மாணவர்கள் வருகை தந்தனர். இவர்கள் ஒரு வார பயணமாக திருச்சி கல்லணை அணை, மலைக்கோட்டை கோவில், தஞ்சை பெரிய கோவில், கீழடி மதுரை, அப்துல் கலாம் நினைவிடம், ராமேஸ்வரம் கோவில், சித்தனவாசல் குகை போன்ற இடங்களுக்குச் சென்று இந்தியாவின் இளைஞர்களிடையே ஒற்றுமை மற்றும் ஒற்றுமை உணர்வை வளர்க்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. கலாச்சார மற்றும் கல்விச் சுற்றுப்பயணங்கள் மூலம், மாணவர்கள் நமது நாட்டின் வளமான பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தை ஆராய்ந்து அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த நிகழ்ச்சியில் ஐ.ஐ.எம். திருச்சி யுவ சங்கம் 3-ம் கட்ட டீன் டாக்டர் சரவணன், ஐ.ஐ.எம். இயக்குனர் பேராசிரியர் கோபால், உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் யுவ சங்கக் குழு உறுப்பினர் தீபா நன்றி கூறினார்.

Source: **Daily Thanthi**
Date: **26-11-2023**
Page **No: 08**